# தேவனை அறிவது மெய்யாகவே சிறந்தது




## 1.9 யெகொவா ரோயி

**வேத வசனம்:** **ஜீவமார்க்கத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர். உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலதுபாரிசத்தில் நித்தியபேரின்பமும் உண்டு.**

*சங்கீதம் 16:11*



**அறிக்கை:** **தேவன் என் வாழ்க்கைக்குப் பாதையைக் காண்பிப்பார்**

**சத்தியம்:** நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் என்று இயேசு சொன்னார். அவர் நல்ல மேய்ப்பர். நாம் அவருடைய ஆடுகளாகையால் அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும்.

## வேத பகுதி: யோவான் 10:1-16

**பாடம்**

**1. நாம் கர்த்தருடைய ஆடுகள்:** சங்கீதக்காரன் தேவனுடன் உள்ள நம்முடைய உறவைக்குறித்து அன்புடன் குறிப்பிடுகிறார். “நாம் அவர் மேய்ச்சலின் ஜனங்களும், அவர்கைக்குள்ளான ஆடுகளுமாமே”. (சங். 95:7)

**2. ஆடுகளுக்குப் பாதுகாப்பு வேண்டும்:** ஒரு மேய்ப்பனின் வழிநடத்துதல் ஆடுகளுக்கு தேவை என்பதே ஒரு ஆட்டைக்குறித்த உண்மை. அதனால் அது தோலைந்து போகாது. அவைகள் நரிகளுக்கு இறையாகாமலிருக்க மேய்ப்பனின் பாதுகாப்பும் தேவை. அதுபோல தேவனுடைய பிள்ளைகளாகிய நாமும் அனுதினமும் மோசம்போக்கும் நரிகளிடமிருந்து பாதுகாக்கப்பட வேண்டியுள்ளது. எதிர்மாறான விளைவுகளை நம் பிள்ளைகளுக்குள் ஏற்படுத்தும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும் நரிகளுள் ஒன்று. அவைகள் ஒரு பொறியாக செயல்பட்டு நம் பிள்ளைகளின் படிக்கும் நேரங்களை வீணாக்கவும், அவர்கள் சிந்தைகளைப் பாழாக்கவும் செய்கிறது.

**3. இயேசுவே நல்ல மேய்ப்பர்:** சங்கீதம் 23ஐ சத்தமாக வாசியுங்கள். “கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்... அமர்ந்த தண்ணீர்கள் அண்டையில் என்னைக் கொண்டுபோய் விடுகிறார்...” நம் அனுதின வாழ்வில் நாம் சரியான தீர்மானங்களை எடுக்கவேண்டும் என்று ஆண்டவர் இயேசு விரும்புகிறார். நமக்கு முக்கியமான தேவைகள் என்னவென்று அவருக்கே தெரியும்.

**4. தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிதல்:** ஆடு தன்னுடைய சிறந்த மேய்ப்பனின் சத்தத்தைக் கேட்கவேண்டும் என்று வேதம் சொல்லுகிறது. (வேதாகமத்தைக் கைகளில் உயர்த்திப் பிடித்துக்கொண்டு சொல்லுங்கள்) அனைவரும் சொல்லுங்கள். கர்த்தர் சொல்லுகிறார்: “என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது...” (யோவான் 10:27)

**5. எதிரிக்குச் செவி சாய்க்காமை:** எல்லா ஆடுகளுக்கும் மேய்பனின் குரலுக்கும் ஏமாற்றுக்காரனின் குரலுக்கும் உள்ள வித்தியாசம் தெரிந்திருக்க வேண்டும். அதனால் அவைகள் ஏமாற்றத்திலிருந்தும், தவறான பாதையில் செல்லுவதிலிருந்தும் தப்பித்துக்கொள்ளும். கர்த்தருடைய அடிச்சுவடுகளிலிருந்து மாறுபடும் பல செய்திகள், ஒவ்வொரு நாளும் பல புத்தகங்களிலும் நாழிதள்களிலும் வெளிவருகிறது. அவைகளைக்குறித்து எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். (யோவான் 10:4-5)

**முடிவுரை:** இயேசுவே வழியும் சத்தியமும் ஜீவனுமானவர். நம்முடைய வாழ்வின் வழிகள் என்னவென்பதை நாம் அறிந்துகொள்ளும்படி அவர் செய்து நம்மை அவருடைய பிரசன்னத்தாலும் மகிழ்ச்சியினாலும் நிறைத்திருக்கிறார். நாம் அவருடன் நெருக்கமாக நடந்து அவருடைய சத்தத்தைப் புரிந்துகொள்ள வேண்டும்.

**ஜெபம் / அழைப்பு:** இன்றைய சத்தியம் நமது இருதயங்களில் எழுதப்படும்படி இயேசுவின் நாமத்தினால் ஜெபியுங்கள்.